Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 31 | விளம்பி புரட்டாசி 1958 செப்டம்பர் | இதழ் 9

*"கணபதியை நினைந்து வாழ்வாம்"

(சைவ சித்தாந்த சண்டமாருதம் - **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர்**)

திருவாவடுதுறை யாதீனத்துக் கச்சியப்பத் தம்பிரான் சுவாமிகள் கூறியுள்ள பார்க்கவ புராணக் காப்புச் செய்யுளை ஈண்டு வரைந்து, அதன்கண் பொதிந்துள்ள விநாயகப் பெருமானுடைய மகிமாதிசயங்களை நமக்கு எட்டியமட்டில் சிறிது விரித்தோதுவாம் :

"அகரமென அறிவாகி உலகம் எங்கும்
அமர்ந்தகர வுகரமக ரங்கள் தம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லோர்க்கு
நிகரில்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்"

இத்தெய்வ வணக்கத்துள், தெய்வமாகிய விநாயகர் "அகர மென அறிவாகி உலகமெங்கும் அமர்ந்து" உள்ளமை கூறப்பட்டது. ஈண்டு "அறிவாகி" என்றது விநாயகரிடம் சேர்ந்

*"சுக்லாம் பரதர விசாரம்" என்னும் மறுப்புரை நூலினின்று, ஏற்ற பெற்றி எடுத்துத் தொகுக்கப் பெற்றது.—முருகவேள்

தது. இவ்வறிவாம் தன்மைக்கு அகரம் உபமானம் ஆயிற்று. உபமானத் தானத்தில் நின்ற அகரம் எழுத்துக்களுக்கு முதலாகிஅவைகளை இயக்குதல்போல, அறிவாகிய விநாயகர் உலகத்துக்கு முதலாகி அதனை இயக்குமாறு அறிக. அகரம் எழுத்துக்களை இயக்கும் உண்மையை "அகர முதல எழுத் தெல்லாம்" எனக் குறளாசிரியர் கூறினர். அவரே "ஆதி பகவன் முதற்றே உலகு" என உபமேயத்தானத்தில் நின்ற அறிவு அல்லது விநாயகர் என்னும் ஆதிபகவன் உலகத்தை இயக்குதலையும் விதந்தருளினர். இக்காப்புச் செய்யுளில் "உலகம் எங்கும் அமர்ந்து" என விரித்தமையே, அறிவாகிய விநாயகர் உலகத்தை இயக்குதற்கு ஆதரவாகியது. இன் னும் இவ்வுண்மையை,

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து"

என்னும் திருவருட் பயனாலும் தெளியலாம் என்க. இத் திருவருட்பயன் குறளாசிரியராகிய திருவள்ளுவனர் கூறிய அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாலுக்கு அப்பால தாகிய வீட்டையே விளக்கவந்த தென்க. இதனை ஆக்கி யோர் சந்தான குரவருள் ஒருவராகிய உமாபதிசிவம் என் றறிக. இவரது திருவாக்கிற் போந்த "அறிவாகி" என்ற தனையே இவ்வணக்கச் செய்யுளில் "அறிவாகி" என அருளிச் செய்ததறிக.

இனி, விநாயகப் பெருமான் பிரணவப் பொருளாம் பெருந்தகை என்னும் உண்மை, "அகர உகர மகரங்கள் தம்மாற் பகரும் ஒரு முதல் ஆகி" என்றதனுல் உணர்த்தப் பட்டது. பிரணவம் என்பது ஓங்காரம். ஓங்காரத்தில் அகார உகார மகாரங்கள் அந்தர்க்கதம். ஆதலாற் பிரண வத்தினை "அகர உகர மகரங்கள் தம்மாற் பகரும் ஒரு முதல்" என்ருர். வாயை அங்காத்தல் அகரம், இது சிருட்டி; திறந்த வாயை அப்படியே குவித்து நிலைபெறுவித்தல் உகரம், இது ஸ்திதி; அந்த வாயை மூடுதல் மகரம், இது சங்காரம். எனவே, ஓங்காரம் முத்தொழில் நிகழ்ச்சிகளுக் கும் அடிப்படையாதல் பெற்ரும். இவ்வோங்காரமாகிய பிரணவம் விநாயகர் வடிவம் என்பதற்குப் பிள்ளையார் சுழியே சான்ரும். பிள்ளையார்சுழி என்பது உலகில் ஓவ்

வொருவரும் ஒரு விஷயம் எழுதத் தொடங்கும்போது தலைப்பில் எழுதும் ௨ என்னும் அடையாளமாம். இதனை "ப்ரதமம் பிந்துஸம் யுக்தம் த்விதீயம் தண்டமுச்யதே" என்று துணிந்தனர் மேலோர். முதல் பிந்து என்பது ○ என்னும் வட்ட வடிவு. இரண்டாவது தண்டம் என்பது —— என்னும் கோட்டுருவமாம். இவற்றுள் முன்னையது பிந்துவும், பின்னையது நாதமுமாம். இரண்டும் சேர்ந்தே பிள்ளையார் சுழியாம். பிரணவமானது அகார உகார மகார பிந்துநாத வடிவம் என்பது கணபத் யுபநிஷத்தால் அறியலாம். இவ்வாற்ருல் ஓங்காரத்திற்கும் பஞ்சாட்சரம் என ஒரு பெயர் உண்டு. உச்சாரண மாத்திரத்திற் பாசத்தினின் றும் தாண்டி உயரச் செய்கின்றமையால் ஓம் என்று கூறப் படும் எனவும், பிராணோத்கிரமண காலத்திற் பரமாத்மாவி னிடத்தில் சேர்ப்பிக்கின்றமையால் பிரணவம் என்று படிக் கப்படும் எனவும், ஸம்ஸார பந்தத்தைத் தாண்டப் பண்ணு கின்றமையால், தாரகம் என்று ஸ்மரிக்கப்படும் எனவும் அதர்வசிரசு ஜாபாலம் முதலிய சுருதிகள் கொண்டாடித் துதிக்கும் மந்திரராஜம் ஆகிய ஏகாட்சர சொரூபர் விநாய கக் கடவுள் என்றே அறியத்தக்கது. ஓம் என்னும் மகா மந்திரம் இவ் விநாயக மூர்த்தியினது வடிவம் என்பதற்கு இவரது யானை முகமே சான்று பகரும். யானை தன் தும்பிக்கையைச் சிறிது மடக்கி மடித்து விளையாடின், ஓம் என்னும் அடையாளத்தினை அதன்கட் காணலாம். வேத வரம்பில் நின்ற சமயிகள் பல பாஷையினராய் இருப்பினும் தத்தம் பாஷைகளிற் போந்த ஓகார ஒலியின் வடிவினை மந்திரமாகக் கொள்ளாமல், தமிழ் 'ஓ' வடிவினையே மந்திர மாகக் கொண்டு வந்திப்பர் என்க. மேடம் - பிளவாட்ஸ்கி முதலிய அன்னியநாட்டு வைதிகச் சீமாட்டிகளும் அன்ருே, தமது இங்கிலீஷ் புத்தகங்களில் தமிழ் ஓம் அடையாளம் இட்டுப் பிரணவத்தை வந்தித்து வாழ்த்துகின்றனர்!

இனி, அகர உகர மகரங்கள் வியஷ்டிப் பிரணவமும், ஓம் என்பது சமஷ்டிப் பிரணவமுமாம். அகர உகர மகரங் களாகி விரிந்தபோது மூன்றெழுத்தாயும், இம்மூன்றுங் கூடி ஓம் என்று உச்சரிக்கப்படும்போது நாதமாயும், ஓம் என்று எழுதும்போது விந்துவாயும், முதல் மூன்றெழுத் தும் இவ்விந்து நாதங்களாகிய வரிவடிவும் ஒலிவடிவும்

கூடியபோது ஐந்தெழுத்தாயும் விளங்குவது ஏகாட்சர மாகிய விநாயகரது மந்திரத் திருமேனியேயாம். ஓம் என்னும் இம் மந்திரம் இதர தேவதாபரமான மந்திரங்களின் முதலிற் சேர்த்துப் படிக்கப்படும் வழக்குண்மையால், இதனை ஒன்றோடும் சேர்த்துப் படிக்காமல் வேறுபடுத்தி அநுட்டிக்கும் ஆதிக்யத்தையும் விளக்குதற் பொருட்டே "வேறுமாகி" என்ற பிரயோகம் நின்று பயன் செய்தது. ஓம் என்பது சேராத ஒரு மந்திரமுமில்லை. ஓம் என்பது சேராதபோது மற்ற மந்திரங்கள் பயன்படமாட்டா. ஓம் என்பது பிரதக் மந்திரம். இந்த மந்திரமே யோகிகள் தியானிக்கும் (அ - உ - ம்) எட்டும் இரண்டும் ஆகிய மந்திரம். ஓம் என்பது உயிரும் ஏனை மந்திரங்கள் உடல்களுமாம். உயிர் இல்லாதபோது உடல்கள் இயங்காதவாறு போல, ஓம் என்பது சேராதபோது ஏனை மந்திரங்கள் இயங்க மாட்டா என்க. உயிர் இல்லாத உடல்கள் பிணங்களே யாயினவாறு, பிரணவம் இல்லாத மந்திரங்கள் பிணங்களே யாகும். இந்நியதி ஸ்ரீ பஞ்சாக்கரத்துக்கு மட்டும் கிடையாது. பஞ்சாட்சரம் என்பது ஐந்தெழுத்து. இவ்வைந்தெழுத்து "ந-ம-சி-வா-ய" என்பதேயாம். இதன் முதலில் ஓம் என்பதில்லை. இது சேர்ந்தால் பஞ்சாட்சரம் என்பது கெட்டு சடாட்சரம் என்று சொல்ல வரும். அப்படி ஏற்பாடில்லை. பஞ்சாட்சரம் பிரணவம் போலத் தானே இயங்கும் ஆற்றலுடைய பெருமந்திரம். பிரணவம் வேறு துணை வேண்டாது உச்சரிக்கப்படுவதுபோல், பஞ்சாட்சரமும் வேறொன்றன் ஆச்சிரயம் இல்லாமல் உச்சரிக்கப்படும் தகைமையினதாகும். எனவே, எல்லா மெய்யெழுத்துக்களிலும் சேர்ந்து அவ்வெழுத்துக்களை அகரம் இயக்குதல் போலவே, பஞ்சாட்சரம் தவிர்ந்த ஏனை எல்லா மந்திரங்களிலும் சேர்ந்து ஓம் என்னும் மந்திரம் அவற்றை உயிர்ப்பிக்கும். இங்ஙனம் ஏனை மந்திரங்களி லெல்லாம் மேம்பட்டுயர்ந்து வேறாய தனிச் சிறப்புப் பெற்றுடைமை பற்றியே "வேறுமாகி" என அருளிச் செய்யப்பட்டது. அகரம் எல்லா எழுத்துக்களோடும் கலந்து அவற்றை இயக்கி வியாபகமாய் நிற்பினும் அவற்றின் வேறாகவும் விளங்குதல்போல, விநாயகராகிய முதற் பொருளும் உலகின் கணுள்ள சிற்சடப் பொருள்களி லெல்லாம் நிறைந்து

அவற்றை இயக்கி நிற்பினும் அவற்றின் வேருகவும் விளங்குவர் என்ப துணர்த்துதற்கு " வேறுமாகி " எனப்பட்டது எனினும் அமையும்.

இனி, " ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும் " என்றபடி, அன்பினல் வழிபடும் அடியவர்கட்கு அருள்புரிதற் பொருட்டு அவர் விரும்பும் பலதிறத் திருமேனிகளை மேற் கோடல் விநாயகப் பெருமானுக்கு இயல்பாதலால் " பல வேறு திருமேனி தரித்துக்கொண்டு " எனப்பட்டது. " நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் " என்றபடி, சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் மகேசன் உருத்திரன் மால் அயன் என்னும் பலதிற வடிவங்களைச் சிவத்தின் வேருகாத விநாயகர் ஆகிய முதற்பெருங் கடவுள் தாங்குவராதலின், அவ்வுண்மையைக் குறித்ததாகக் கொள்ளினும் அமையும்.

இனி, விநாயகர்தம் திருப்பெயர்களுள் ஒன்ருகிய விக்னேசுவரர் என்னும் திருநாமத்துக்குத் தம்மை வழிபடுகின்றவர்களுக்கு விக்கினங்கள் சேராவகை முன்னிற்பவர் எனவும், தம்மை வழிபடாதவர்களுக்கு விக்கினங்களை யுண்டு பண்ணுகின்றவர் எனவும் பொருள் கூறுவர் பெரியோர். இங்ஙனம் தம்மை வழிபடுவார்க்கு இடர்கள் ஏதும் ஏற்படாமல் தடுத்து அருள்புரிதலை அறக்கருணை என்றும், தம்மை வழிபடாதார்க்கு இடர்களை விளைத்துத் திருத்திக் காத்தலை மறக்கருணை என்றும் நூல்கள் நுவலா நிற்கும். விநாயகக் கடவுள் தம்பால் அன்புடையராய்ப் பணிந்து வழிபடுவார்க்கு நேரும் இடர்களை நீக்கித் தர்மம் அர்த்தம் காமம் மோட்சம் என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் அளித்து அருள்புரிவார் என்பதனைப் " புகரில் பொருள் நான்கினையும் இடர்தீர்ந்து எய்தப் போற்றுநருக்கு அறக்கருணை புரிந்து " என விளக்கியவாறுணர்க. இதனல் விநாயகர் வழிபாட்டா னன்றி அறம் பொருள் இன்பம் வீடு என்னும் பேறுகள் புருடர்க்கு வந்தெய்தா எனல் பெறப்படும். பிற தேவர்களால் ஒரோவழி அறம் பொருள் இன்பங்களைப் பெறுதல் கூடும் எனக் கொள்ளினும், வீடுபேருென்றும் விநாயகக் கடவுளை வழிபடுதல் ஒன்றினல் மட்டுமே எளிதின் எய்தப் படும் என்பது வற்புறுத்தப் " புகரில் பொருள் நான்கினையும் " என முற்றும்மை கொடுத்தோதப்பட்ட தென்க.

உலகில் தமது புதல்வர்க்கு ஒருவித வலி கண்டபோது அவரை நெருப்பிற் காய்ச்சிய இருப்புக் கோலாற் சூடிடு வித்தலும், அவர்தம் உடம்பிற் கண்ட புண்ணைக் கத்தி கொண்டு அறுப்பித்தலும், அவ்வாறு சூடிட்டும் அறுத்தும் தொழில் புரிந்தார்க்கு அவர் மகிழுமாறு நிரம்ப நிதி கொடுத்தலும் அப்புதல்வரைப் பெற்றவர்க்கு உற்ற கடனா யிருப்பது யாவரும் அறிந்த செய்தி. இஃது அப்புதல்வர்க்கு அப்போது இன்னாததா யிருப்பினும் பின்னர் இன்பமே தரும். இச் செய்கை அப்புதல்வரைப் பெற்றவரது கருணை யைக் காட்டுமே யன்றிக் கொடுமையைக் காட்டாது. அஃது அநுபவிக்கின்ற காலத்திற் கொடுமையாக வருத்து தல் பற்றியே மறக்கருணை என்னும் பேர்பெற்றது.

> " ஓடியதே ரின்கீழ் உயிர்போன கன்றாலே
> நீடுபெரும் பாவம்இன்றே நீங்குமென—நாடித்தன்
> மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக
> நஞ்சனைய சிந்தை நமன்தூதர்—வெஞ்சினத்தால்
> அல்லல் உறுத்தும் அருநரகம் கண்டுநிற்க
> வல்ல கருணை மறம் போற்றி !"

என்னும் போற்றிப் பஃறொடையால் மறக்கருணையின் தன்மை விளங்கும். தம்மைத் தொழுது வழிபடாதாரை இடர்விளைத் துத் திருத்தி அருள்புரிந் தாட்கொள்ளும் மேன்மையார் விநாயகர் என்பது தோன்ற " அல்லார்க்கு நிகரில் மறக்கருணை புரிந்து ஆட்கோள்ளும் " என அருளிச் செய்யப்பெற்றது.

இங்ஙனம் தமது அறக்கருணையானும் மறக்கருணை யானும் உயிர்களுக்கு அருள்புரியும் விநாயகப் பெருமான் மலமுத்தர் என்பது தோன்ற " நிருமலனை " எனவும்; அவர் சர்வகணங்களுக்கும் தலைவராதலை அறிவிக்குமாறு " கண பதியை " எனவும் ஈண்டு எடுத்தோதலாயிற்று. தாம் நிர்மல ராய் இருந்தால் ஒழிய மலமுடையாரது தோடங்களை மாற் றல் இயலாது. பிறரது மலமாயாதி தோடங்களை மோசித்து அவர்கட்கு அருளும் தலைமை யுடையர் என்பதையே "கணபதி" என்னும் அவரது திருநாமம் தெரிவிக்கின்றது. இக் கணபதி நாமத்தால் " கணபத் யுபநிஷத்து " என ஓர் உபநிஷத்தும் பிரகாசிக்கின்றது. அதன்கண் இவர்தம்

பரத்துவ நிலையையே இனிது பிரகாசம் பண்ணியிருக்கிறது. இவருக்குமேல் ஒரு பரவஸ்து இல்லை என்பதே அதன் துணிவு. அத் திருநாமமும் அந்தப் பொருளிலேயே பரிவஸாந முறுதலால், உயிர்கள் சுலபமாக உலகத்துக்குத் தலைவர் இவரே என அறிந்தின்புறுதல் கூடும் என்க. இவ்வுண்மையால், பரமபதியாகிய விநாயகரை வழிபடுமாறு "நினைந்து வாழ்வாம்" என்று இச் செய்யுளில் முடிவாகத் தெரிவித்த தாயிற்று. மனம் வாக்கு காயம் என்னும் திரிகரண வழிபாடுகளிற் காய வழிபாட்டின் மேலிட்டது வாக்கின் வழிபாடும், வாக்கின் வழிபாட்டின் மேலிட்டது மனத்தின் வழிபாடு மாகையால், அதீதமாகிய மனத்தின் வழிபாட்டை மாத்திரம் ஈண்டுக் கூறியது குற்றமாகாது. காயம் வாக்கு என்பவற்றின் முடிவிலேயே மனத்தின் வழிபாடு கேட்கப்படுகையால், "நினைந்து" என்று கூறியது கைகூப்பி—துதித்து—நினைத்து என்றே முடிவு பெற்று எல்லா வழிபாடுகளையும் கூறியதாகவே அமைந்தது.

ஆகையால், யாமும் அவ் விநாயகக் கடவுளை மன மொழி மெய்களால் வழிபட்டு அவரது திருவருட் பிரஸாதத்தைப் பெற்று வாழ்வாம் என்க.

"கற்றுப் புலமைமிகு கச்சியப்பர் பாடலின்கண்
பொற்பத் துவன்று பொருள்பலவும்,—தெற்றெனவே
நன்கு மிகச்சோம சுந்தர நாயகர்தாம்
மன்பெரிதும் தேற்றுதிறம் மாண்பு !—முருகவேள்

சைவ சித்தாந்தம் வளர்ந்த வழி-மாணவருக்கு

(தி. கி. நாராயணசாமி)

[மலர்-31 ; இதழ்-8 ; 272-ம் பக்கத் தொடர்ச்சி]

சேக்கிழாரை அடுத்து வந்தவர்கள் திருஉந்தியார், திருக்களிற்றுப் படியார் செய்த இரு வேறு உய்ய வந்த தேவ நாயன்மார்கள். திருஉந்தியார், மகளிர் விளையாட்டான உந்தியை ஒட்டியது. அது முழு சாத்திர நூல் அன்று. தோத்திர நூலாகிய திருவாசகத்தில் உந்தியார் ஒன்று

உண்டு. திருஉந்தியார் தோத்திரம் மிகக் குறைந்து சாத்திரம் மிக வாய்ந்த நூல். இதைவிடத் திருக்களிற்றுப்படியார், சாத்திரத் தன்மை மிக வாய்ந்தது. இதன் பின் தலைமையான முழுச்சாத்திர முதல் நூலான சிவஞானபோதம் ஒன்றே செய்த மெய்கண்டதேவர் தோன்றினர். சிவஞான போதத்தின் வழிநூல் அருணந்தியார் செய்த சிவஞான சித்தியார். சார்புநூல் உமாபதியார் செய்த சிவப்பிரகாசம். சிவஞான போதம் மொழி பெயர்ப்பு அல்ல; தமிழில் செய்த முதல் நூலே ஆம். இதனால் வரலாற்றுப்படி தமிழ் மரத்தில் பூத்துக் காய்த்துக் கனிந்த கனி சைவ சித்தாந்தம் என்பது தெளிவாம். மெய்கண்டாரிடம் அருளுரை பெற்ற மனவாசகங் கடந்தார் இயற்றிய உண்மை விளக்கத்தில் வேறுபாடு பெரிதும் உள்ளதால் அது வழிநூலாக அமையவில்லை போலும். சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு. அவை: 1திருவுந்தியார், 2திருக்களிற்றுப்படியார், 3சிவஞான போதம், 4சிவஞான சித்தியார், 5இருபாவிருபஃது, 6உண்மை விளக்கம், 7சிவப்பிரகாசம், 8திருவருட்பயன், 9வினா வெண்பா, 10போற்றிப் பஃறொடை, 11கொடிக்கவி, 12நெஞ்சுவிடுதூது, 13உண்மை நெறிவிளக்கம், 14சங்கற்ப நிராகரணம் என்பன. இவற்றைத் தொகுத்துக்கூறிய "உந்திகளிறு" என்ற வெண்பாவின் காலம் தெரிந்தால், சாத்திரம் பதினான்கு என்று வரையறுத்த காலம் ஒருவாறு அறியலாம்.

மெய்கண்ட தேவர், அருணந்தி தேவர், மறைஞான சம்பந்தர், உமாபதியார் என்ற நால்வரும் சந்தான குரவர் என்பது மரபு. *சந்தான குரவர் என்பது உபதேச வழி முறைமையை அறிவிக்கும். முதல் சிவன், பின் நந்திபெருமான், இருடிகணங்கள் வழியாய் மெய்கண்ட தேவர் வரை வந்து, அவர் வழியாக மக்களுக்குப் பயன்பட்டு நிற்கும் தலை சிறந்த ஞானத்தின் வழிமுறையில் தொடர்புற்ற மெய்கண்டார் முதல், நால்வரைச் சந்தான குரவர் என்றனர். இரு உய்ய வந்த தேவ நாயன்மார்களை ஒப்புக்காக வேனும் சந்தான குரவர் என்று அழைக்கும் வழக்காறு இல்லை. சமயகுரவர் நால்வர்போல சந்தானகுரவர் நால்வர் ஆயினர் சமய குரவர் தமிழ் மரபு தழுவிய வேதத்தின் ஞானகாண்

*சந்தானச் சொல்லைச் சிவப்பிரகாசம் 5-ல் பார்க்க.

டப் பொருளைத் திருமுறைகளால் வெளிப்படுத்தினார்கள். சந்தான குரவர்கள் தமிழின் மெய்ஞ்ஞானமான ஆகமங்களின் ஞானபாதப் பொருளைச் சைவ சித்தாந்த சாத்திரங்களாக வெளியிட்டார்கள்.

முன் கூறிய பதினான்கு சாத்திரங்களும் சைவசித்தாந்த சாத்திரங்கள் என்பதற்குக் காரணம் என்ன? சைவ சித்தாந்தம் என்னும் சொற்றொடர் முதற் சாத்திர நூலிலும், அதற்கு முன்னைய நூல்களிலும், காணப்படவில்லை. உமாபதி சிவமே, இத் தத்துவமுறைக்கு இப்பெயரைச் சிவப்பிரகாசத்தில் " வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் " என்றார். சிற்றம்பல நாடிகள் " சைவம்-சிவத்தொடு சம்பந்தம் " என்றார். சித்தாந்தம் என்றால் முடிவு. சைவத்திற்கும் சித்தாந்தத்திற்கும் பொருள் இவையாயினும் இப்பொருளில் சைவ சித்தாந்தச் சொல்லாட்சி இல்லை. சைவம் என்ற சொல்லுக்கு ஆகமம் என்ற வேறொரு பொருளும் உண்டு. ஆகமத்தின் முடிந்த ஞானம் சைவ சித்தாந்தம் ஆயிற்று. சித்தாந்தம் என்ற தனிச் சொல் சமய வழியில் ஆகம முடிவைக் குறிக்கவே பயன்படும். அப்பொருளில் வேதாந்தம், சித்தாந்தம் என்ற இரு வேறு கொள்கைகள் குறிக்கப்படுதல் காண்க. வேதாந்தம், சங்கரர்கொள்கை எனக்கொண்டு அதற்குச் சித்தாந்தம் மாறுபட்டது என்பது முண்டு. முன் கூறியபடி வேதாந்தம் உபநிடதங்களையும் சூத்திரங்களையும் குறிக்கும். அதனால் வேதாந்தத்தைத் தழுவிச் சித்தாந்தம் நடத்தல் முடியாத தன்று. நீலகண்டரும் தமது பாடியத்தில் வேதமும் ஆகமமும் ஒன்றே; வேதம்-சூத்திரம், ஆகமம்-பாடியம் (விரிவுரை) என்று கூறினார்கள். உமாபதியார் வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் என்றது இக்கருத்துப்பற்றியே ஆகும். பின்னர் குமரகுருபரர் " வேதாந்தம் என்ற உச்சியிற் பழுத்த வாரா வின்ப அருங்கனி பிழிந்து சாரம் கொண்ட சைவ சித்தாந்தம் " என்றும், தாயுமானவர் "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை" என்றும் இக்கருத்தைத் தழுவியே அருளினார்கள் என்று துணியமுடியாது. வேதாந்தமும் சித்தாந்தமும் தம்முள் பொருத்த முடையது என்றால் 'சமரச' என்ற சொல் வருதற்கு ஏது இல்லை. திரு. வி. க. அவர்கள் சித்தர் முடிவே சைவ சித்தாந்தம் என்றார்கள்.

திருஉந்தியாரைத் திருவியலூர் உய்யவந்த தேவரும், திருக்களிற்றுப்படியாரைத் திருக்கடவூர் உய்யவந்த தேவரும் இயற்றினார்கள். உலகம் உய்ய, ஊர் உய்ய வந்தவர்கள் என்ற கருத்துப்பட இப்பெயர் இருத்தலால், உய்யவந்தார் என்பது மெய்கண்டார் என்பது போலக் காரணப் பெயர். அல்லது தீக்கைப் பெயராக இருக்கலாம். திருஉந்தியார் ஆசிரியருக்கும் திருக்களிற்றுப்படியார் ஆசிரியருக்கும் குரு சீடர் முறை உண்டென்பது மரபு. *இவ் விரண்டு நூல்களை யும் ஒத்து நோக்கினால் திருஉந்தியார் சூத்திரமாகவும், திருக் களிற்றுப்படியார் விரிவுரையாகவும் அமைந்திருப்பது காணலாம். †திருக்களிற்றுப்படியாரில் " திருவிசலூராளும் சிவயோகி இன்றுஎன் வருவினையை மாற்றினான் " என்றதால் இவர்க்கு ஆசிரியர் திருவியலூர் உய்யவந்த தேவர் என்பது தெளிவு. உய்யவந்த தேவர் வடக்கே இருந்து வந்து தமிழ் நாட்டில் தங்கிச் சாத்திரம் செய்தவர் என்பது, ஒரு சாரார் மரபு. அஃது உண்மையானால் திருஉந்தியாரை இயற்றியவரே அத் தேவராவர். நூலின் நடையும் இக் கொள்கையை வலியுறுத்தும்.

நாட்டில் வழங்கும் இவ்விரு உய்யவந்த தேவர்களைப் பற்றிய கதை வருமாறு :—திருக்கடவூர்த் தேவர், ஞான ஆசிரியனை நாடி இருந்தபொழுது, ஒரு பெரியார், உண்மை ஞானம் எய்திய சிவானுபூதிச் செல்வராம் உய்ய வந்த தேவர் திருவியலூரிலே இருக்கிறார். அவரிடம் சென்றால் உய்யலாம் என்றார். திருக்கடவூர் தேவர் அவர் அறிவுரைப் படி திருவியலூர் சென்று, தேடி வந்த குரு காணாமல் திகைத்து நின்றார். பின் வழிப்போக்கரால் அவர் இறைச்சிக் கடை முதல்வர் என்பது அறிந்து தியங்கினார். ஆனால் அம் முதல்வரைக் கண்டு வீழ்ந்து வணங்கினார். திருவியலூராரும் வணக்கத்தை ஏற்று, பின் கடையைக் கவனித்தார். திருக் கடவூராருக்கு ஐயம் தீரவில்லை. அறியாது இங்கு வந்து விட்டதாக எண்ணி மீளத்தலைப்பட்டார். கடையும் முடிந்து, மூடிய பின் 'வந்த காரியம்' என்ன ? என்று கேட்டார். அப்பொழுது திருவியலூர் தேவரிடத்து அடங்கி இருந்த

*அகளமாய்-உந்தி-1. அகளமயமாய்-களிறு - 4. உள்ளமுருகி - உந்தி - 7. உள்ள முதலனைத்து - களிறு - 14.

†96-ம் பாட்டு.

முகமலர்ச்சியும் அருட் பொலிவும் விளங்கித் தோன்றியது. திருக்கடவூர் தேவருக்கு ஐயம் திரிபு அறத் தீர்ந்து 'அடிகளிடத்து அருளுரை பெற அவாவி அடியேன் வந்தேன்' என்றார். அவரும் அவரது வரலாறு உணர்ந்ததாக உரைத்து, நமது கடைநிகழ்ச்சிகளால் மாறுபட எண்ணவேண்டாம். பக்குவமடைந்த உயிர்கள் கீழ்ப்பிறப்பில்வருந்துவனவற்றை விரைவில் மேலான பிறப்பு பெற்று உய்யும்படி நாம் அருள் வாளால் செலுத்துகின்றோம்' என்று தம் நிலையைச் சுட்டி, பின் அருளுரை செய்து, தாம் செய்த திருஉந்தியாரைக் கொடுத்து ஆட்கொண்டார். பின் திருக்கடவூர் தேவர் தில்லை வந்து, தம்மை அடைந்தார் பொருட்டு, ஒரு நூலைச் செய்து அதன் அருமை பெருமையை உலகத்தார் உணர்ந்து உய்யத் திருவுளம் கொண்டு, சிற்றம்பலம் சென்று வணங்கி, திருக்களிற்றுப்படியில்அந்நூலை வைத்தபோது திருக்களிற்றுக்கை நிமிர்ந்து அதனை வாங்கி ஆடலரசின் திருவடியிலே கொடுத்ததால் அந்த நூலுக்குத் "திருக்களிற்றுப்படியார்" என்று யாவரும் பெயரிட்டனர். திருவுந்தியாருக்கு முன் சாத்திரங்கள் இருந்தனவாகப் புலப்படவில்லை. ஆனால் திருக்கடவூரார் *"ஒன்றுரைத்தது ஒன்று உரையா சாத்திரங்கள் ஒன்றாக நின்றுரைத்து நிச்சயிக்கமாட்டாவால்" என்றமையால் சாத்திரங்கள் பல இருந்தன என்பது தெளிவு. மற்றும் சாத்திரங்கள் ஆறு என்று அந் நூலிலே குறிப்பதும் காண்க. திருவுந்தியார் அநுபூதியைக் குறித்து எழுந்த அனுபவ நூலேயாம். நம் நாட்டு ஞானத் தலைவர் யாவரும் நூல் செய்து தம்மை அடைந்தார்க்கு அருளுரையாகச் சொல்வது வழக்கம். அவருள் தமிழ்பாட ஆற்றல் அற்றவர் மிக அரியர். திருவுந்தியார் 45 தாழிசைகளால் ஆனது.

†" உய்யவந்தானுரை " யென ஆசிரியர் பெயரை அறிவித்தது. இவ்வாசிரியர் வழங்கும் பழமொழிகளை இட்டு எளிய சொற்களால் தாம் சொல்லக் கருதிய பொருள்களை மிகத் தெளிவாக அருளியுள்ளார்.

திருக்களிற்றுப்படியார் 100 வெண்பாக்களால் ஆயது. திருவுந்தியாரின் பொருளை விளக்க எழுந்தது போல் தோன்றுமாயினும் வேறு பல புதிய கருத்துகள் இதனுள் காணலாம். இவர் சிவ தருமங்களை மெல்வினை, வல்வினை

* 81-ம் பாட்டு. † 45-ம் பாட்டு.

என்று இரண்டாக வகுத்து எளியவரும் செய்யவல்ல செயல்கள் மெல்வினை என்றும், சிறுத்தொண்டர் சண்டீசர் முதலியோர் உழுவலன்பால் செய்த செயல்கள் வல்வினை என்றும் வகுத்து நூலை உவமை வளத்தொடும் திருக்குறள் திருவாசகச் சொற்றொடர்களை ஆண்டும் அருளினார். இவர் சகமார்க்கத்தை உலக நெறி என்றார். இதனையே அருணந்தி யார் சித்தியாரில் யோகநெறி என்றார். இச்சாத்திரத்தில் பெரியார்கள் வரலாறு பல நிறைந்திருக்கிறது. திருவுந்தி யாரும் திருக்களிற்றுப்படியாரும் சிவஞான போதத்திற்கு முன் தோன்றிய மெய்யறிவு நூல்களே ஆயினும் ஞான நூலாசிரியர்கள் அவற்றின் பெயரையேனும் கூறினாரில்லை. "உந்திகளிறு" வெண்பா செய்தவர், இந்நூல்களைச் சந்தான குரவர் நூலோடு சேர்த்த காரணம் தெரியவில்லை. உய்ய வந்த தேவர்கள் இருவரும் "விஞ்ஞான தேவர்" சந்தானத் தவர் என்பது பூவை - கலியாணசுந்தர முதலியார் கருத்து. *தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், இவர்கள் திரட்டுச் சந்தானத் தவர்களாய் இருக்கலாம் என்றார். †பெருந்திரட்டான சிவப்பிரகாசத்திரட்டில் சித்தாந்த சாத்திரத்தில் திருக்களிற் றுப் படியார் ஒன்றில் மட்டும் மூன்று செய்யுட்களை எடுத் துத் திரட்டப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கது.

விநாயகப் பெருமான்

[G. கலியாணம் M. A., D. Econ.]

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.

சிவகுமாரர்கள் இருவர் - விநாயகர், முருகன். முன்ன வரை மூத்தபிள்ளையார் என்று அழைப்பர். ஆனைமுகன்,

---

* இராமகிருஷ்ண விஜயம் பொங்கல் மலர்.

† களிற்றுப்படியார் 5, 6, 12-ம் பாட்டுகள்.
பெருந்திரட்டில் 1601, 884, 2513-ம் பாடல்கள்.

ஐங்கரன், கணபதி, கஜானனர், விக்கினேசுவரர் முதலிய வேறு பல திருநாமங்களும் அவருக்கு உண்டு. விநாயகர், பார்வதி பரமசிவனுடைய மானசீக புத்திரர். கஜமுகாசுரனைக் கொல்வதற்காகத் தேவர்கள் வேண்டச் சிவபெருமான் திருவருளால் கணபதி திருவவதாரம் செய்தார். ஆனைமுகன் பன்னிரண்டு திருவவதாரங்கள் எடுத்ததாகப் புராணங்கள் கூறும்.

விநாயகர் என்றால் தனக்கு மேல் நாயகர் அல்லது தலைவர் இல்லாதவர் என்று பொருள். 'வி' என்றால் கல்வி என்ற பொருளில் எக்கலைகளுக்கும் தலைவர் என்றும், 'வி' என்றால் திசை என்ற பொருளில் எத்திசைக்கும் ஈசன் என்றும், 'வி' என்றால் அறிவு என்ற பொருளில் அவர் ஞான சொரூபி என்றும் குறிக்கும். விக்கினேசுவரர் என்றால் எந்தக் காரியத்தைத் தொடங்கும்போதும் அவரை வழிபட்டால் இடையூறு வராமல் காப்பார் என்று பொருள்.

இறைவனுடைய தன்மைக் குணங்களை முற்றும் உணர்த்துவது விநாயக உருவம். விநாயகர் மூர்த்தி ஒருவராயினும் மூர்த்தி பேதங்கள் பதினாறு மிக முக்கியமானவை என்பர். ஆனால் பொதுவாக விநாயக உருவத்தில் ஆனைமுகம், தேவஉடல், பூதஅடிகள், அங்குசபாசம், மோதகம், ஒடிந்த கொம்பு இவை ஏந்திய திருக்கரங்கள், அமுத கலசம் தாங்கிய துதிக்கை. இவை எல்லாம் சேர்ந்து பிரணவ (ஓங்கார) வடிவமாக அமைந்திருக்கக் காண்கிறோம்.

மிருக உடல், தேவ உடல் அவருக்கு இருப்பதால் அவர் அஃறிணையு மல்லர்; உயர்திணையு மல்லர். எல்லா உயிர்களும் அவரைத் தொழலாம் என்ற குறிப்பைக் காட்டுகிறது. ஒரு பக்கம் கொம்புடனும், ஒரு பக்கம் கொம்பில்லாமலும் இருப்பதால் அவர் ஆணுமல்லர்; பெண்ணுமல்லர். ஆண் பெண் எல்லாம் வழிபடலாம் என்பதையே குறிக்கின்றது. பாகன் கையில் இருக்கவேண்டிய அங்குச பாசங்கள் அவர் கையில் இருப்பதால் அவரை அடக்கி ஆள்பவர் இல்லை என்றும், மும்மலங்களால் கட்டுண்ட உயிர்களாகிய நம்மை அடக்கி ஆள்பவர் அவர் என்பதையும் உணர்த்தி நிற்கின்றது. அண்டங்களுக்கு உற்பத்தியிடம் அவர் பேழை வயிறு. கையிலுள்ள மோதகம் பிண்டத்

தைக் குறிக்கும். அமுதகலசம் அழிவற்ற தன்மையைக் குறிக்கும். ஐந்து கரங்களும் ஐந்தொழில்களைச் செய்வன. முக்கண்களும் சூரியன், சந்திரன், அக்கினி. இரு செவிகளும் சர்வஞ்ஞத்துவத்தை உணர்த்தும். மும்மதங்கள். இச்சை, கிரியை, ஞானம் இவைகளையும் சத்து, சித்து, ஆனந்தம் இவைகளையும் குறிப்பன. முகம் மாத்திரம் யானையானபடியால் இரண்டு மதங்களே உண்டென்று கொண்டு வலப் பக்கம் பரஞானம் - அறக்கருணை யென்றும், இடப் பக்கம் அபர ஞானம் - மறக்கருணை யென்றும் தத்துவப் பொருள் சொல்வர். அவர் பிறைசூடி இருப்பதை உண்மை அடியவரை உயர்நிலைக்குய்ப்பவர் என்பதைக் காட்டும் என்றும் கூறுவர். பெருச்சாளியை வாகனமாகக் கொண்டது அவர் பிராணிகளிடம் காட்டும் ஒப்பற்ற கருணையைக் குறிக்கும். அவர் ஓங்கார (பிரணவ எழுத்து) வடிவமாக இருப்பது "மறையின் மொழி முதல்" என்ற உண்மையை உணர்த்துகிறது.

விநாயக வழிபாடு நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. சேனாதிபதியாக இருந்த சிறுத்தொண்டர் வாதாபியில் வெற்றிபெற்றுத் திரும்பும்போது வெற்றிச் சின்னமாகக் கொண்டுவந்த விநாயகர் விக்கிரகத்தை தம் மூரான திருச்செங்காட்டங் குடியில் எழுந்தருளுவித்தார். அந்த இடத்திற்குக் கணபதீச்சரம் என்று வழங்குகிறது. அது முதற்கொண்டு தமிழ்நாட்டில் விநாயக வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மண், மஞ்சள், சாணம் இவைகளில் ஒன்றைப் பிடித்து வைத்து வணங்குவது, எதை எழுதத் தொடங்கினாலும் பிள்ளையார் சுழி (உ) போட்டுத் தொடங்குவது, எல்லா நூல்களிலும் காப்புச் செய்யுள் அவர் மேல் பாடுவது, கோயில்களில் முதலில் அவரை வழிபடுவது இவைகளெல்லாம் அவர் வழிபாட்டின் பெருமையைக் காட்டுகின்றன. தலையில் குட்டிக்கொண்டு, கன்னங்களில் போட்டுக்கொண்டு, காதுகளை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போடுவதே அவரை வணங்கும் முறை. நாள்தோறும், வெள்ளிக்கிழமைதோறும் அவரை வழிபடலாம். சிறப்பாக, மாதத்தில் வரும் இரண்டு சதுர்த்திகளிலும், ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியிலும், மாசித் தேய்பிறை செவ்வாய்க்கிழமை கூடிய சதுர்த்தி

யிலும் வழிபடலாம். விநாயகப்பெருமான் சந்திரனுக்கிட்ட சாபத்தையொட்டி நாலாம் பிறையைப் பார்க்கக் கூடாது என்ற வழக்கம் நம் நாட்டில் இருந்து வருகிறது. ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியில்தான் விநாயக வழிபாட்டை நாம் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். சிந்துரன் என்ற அசுரனைக் கொல்ல உமாதேவியார் வயிற்றில் கஜானனர் அவதரித்த காலம் இந்த நாளில்தான் என்பர். ஆதலின் நாம் எல்லோரும் விநாயக சதுர்த்தி யன்று விதிப்படி அவரை வழிபட்டு, விரதம் அனுஷ்டித்து அவர் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

"அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணம்அதிகமாம் அருணைக் கோபுரத்து மேவும்
கணபதியைக் கைதொழுதக்கால்"

வாரவழிபாட்டு மாதர் சங்கங்கள்

26-8-57 சிந்தாதிரிப்பேட்டைத் திரிபுரசுந்தரி மாதர் சங்கம் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையில் துவக்கிவைக்கப்பட்டது. சைவப்பெரியார் திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை B.A.,L.T. அவர்களும், திருவாளர் G. கலியாணம் பிள்ளை M.A. அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

27-8-58 மரகதாம்பாள் மாதர் சங்கம், முத்தியாலுபேட்டை மல்லீசுரர் ஆலயத்தில் திருவாளர் G. கலியாணம் பிள்ளை M.A. அவர்கள் தலைமையில் துவக்கப்பட்டது. திருவாளர் சேதுராமன் சகோதரர்கள், கலைச்செல்வி அம்மையாரவர்கள், திருவாளர் மா. ப. தியாகராஜன் B.A. அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

திருமதி P. K. நாகம்மையாரவர்கள் ஆங்காங்கு மாதர் சங்கங்கள் வாரவழிபாட்டிற்கு நிறுவிவருவது போற்றத்தக்க சமயப்பணியாகும். 27-8-58-ல் நிறுவியுள்ள மரகதாம்பாள் மாதர் சங்கம் ஐந்தாவதாகும்.

ஆளுடையபிள்ளையார் ஞானப்பாலுண்டது.

திருஞான சம்பந்தருடைய தகப்பனார் "சிவபாத இருதயர்" அவர் தினம் பொய்கைக்குப்போய் நீராடுதல் வழக்கம். ஏன்? மலங்கழுவுவதற்கு. "மலங்கழுவுவார் வந்து சார்தலினால்" பொங்கு மடுவும் பொன்னம்பலவனும் ஒன்றென்று காட்டிய மாணிக்கவாசகர் திருவெம்பாவை நினைவிற்கு வந்தது. பொய்கை, பொய்மையாம் உலகத் தோற்றமும் அழிவும் ஓர்தலேயாகும், வெப்பு நீரென்றுணராது, அதிலே தன்னுடைய மரணமுளது என்பதையும் உணராமல் சூடேறும்வரை ஆமை நீஞ்சலடித் தானந்திப்பது போல், நிலையற்ற வாழ்வைச் சதமென்றெண்ணி ஆனந்திக்கும் வாழ்வு அறியாமையே யாகும். வெய்யில் சகித்திடாப் புழுப் போல் பொய்ம்மாயப் புலன் வாழ்க்கையில் அல்லல் சகித்திடாது விடுதலை நாடவிழைவது ஞானம். அப்படிப் பொய்கைக்குச் செல்லுகையில் ஒரு நாள் குழந்தை திருஞான சம்பந்தமூர்த்திகளையும் அழைத்துச் சென்றார். குழந்தை, ஞானசம்பந்தம் பெறப் பொய்கைக் கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். யாரால்? சிவபாத இருதயரால் கொண்டு விடப்பட்டார் என்று எண்ணும்போது, ஒரு தத்துவம் வெளியாகிறது. கொண்டுவிட்ட அவரும் நீரில் மூழ்கி மறைந்தார். மறைந்ததும் தனித்ததோர் நிலையில் குழந்தை அழுதது. "தனித்திரு" என்று வள்ளலார் கூறியதும் அத்தனிமையே. அத்தனிமையில் நிற்கும் உயிருக்கு உய்வுண்டாம் வண்ணம் அருள்பாலிக்கச் சீர்காழிப் பதித் தோணியப்பர் வெளிப்பட்டு அம்பிகையால் அக்குழவிக்கு ஞானப்பால் ஊட்டுவித்தார்.

இறைவனுடைய அருளையே அம்பிகையாக வழிபடுகிறோம். ஆக நமது உயிர் உய்வடைய வேண்டுமெனின்

சிவபாத இருதயம் பெறல்வேண்டும். அதாவது சிவபாதங் களைச் சதா சிந்திக்குமுள்ளம் வேண்டுமென்பது. அப்படிப் பட்ட உள்ளத்திற்கே நிலையற்ற வாழ்வில் கைப்பேறப்படும். அப்படி கொண்டுவிடுத்த உள்ளமும் "அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து" மறையவே சிவபாத தரிசனம் காட்சியளிக்கப் படும். "மாற்றமனம் கழிய நின்ற மறையோனே" என்ற மாணிக்கவாசகர் சிவபுராண வாக்கியம் நினைப்பூட்டு கின்ற தல்லவா ?

பொருளல்லவற்றைப் பற்றும் நிலையும்விட்டு மெய்ப் பொருள் தடத்த உருவத்தில் காணப்பெறாது, நினைப்பற நிற் கின்ற நிலையில் பக்தர்கள் பலர் தனிமையில் அச்சத்தினால் அழுதழுது பாடியிருக்கின்றனர். அந்நிலை தாங்கலாற்றாது தவறிவிடுவோர் பலர் ; பலர் நோய்வாய்ப்படுவோரும் உளர். சித்தப்பிரமை உண்டாகித் திரிபவரும் உளர். இறையருள் நமக்கங்குதவவும், அந்நிலை உறுதிப்படவும் சிவபாத இருதய மும், குழந்தை உள்ளத் தெளிவும், நல்லொழுக்கமும் வேண்டற்பாலதேயாகும். பல ஜன்மப் பழக்கத்தினால் அந்நிலை கைவரப் பெறல்வேண்டும்.

ஆளுடையபிள்ளையார் ஞானப்பாலுண்ட படலம் இவ் வளவு உண்மைகளைக் கொண்டுள்ளதெனப் பெற்றும்.

—"சிவனடியார்"

பன்னிரு திருமுறை

(திரு. பொன். கோவிந்தசாமி, மலேயா.)

ஆசையறாய் ; பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய் ;
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் ;—சீசீ !
சினமே தவிராய் ; திருமுறைகள் ஓதாய் ;
மனமே உனக்கென்ன வாய் ?

தோற்றுவாய் : சைவசமயத்திற்கு அடிப்படையில் ஆதார மான நூல்கள் பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சாத்தி ரங்களும், அவற்றிற்கு மாறுபடாத கருத்துடைய வேத சிவா

கமப் பகுதிகளும் ஆகும். இவற்றுள் திருமுறைகள் பன்னிரண்டு என்பதை நாம் நன்கறிவோம்.

உயிர்கள் உய்வான் வேண்டி இறைவன் வேதாகமங்களை அருளினன். மக்களின் வீடு பேறுக்கம் கருதி அம் முதல்வன் அருள்வழி அவ்வுண்மைகளை மூவர் முதலிய சமய குரவர்கள் தோத்திரங்களாக வருஷித்தருளினர். அவைகளே திருமுறைகளாம்.

சொற்பொருள் : "பன்னிரு" என்றால் பன்னிரண்டு என்பது யாவரும் அறிந்ததே.

"திரு" என்ற சொல்லிற்கு இலக்குமி, செல்வம், சிறப்பு, அழகு, காந்தி, பொலிவு, பாக்கியம், தெய்வத்தன்மை, நல்வினை, மாங்கலியம், சிவம் என ப்பல பொருள்கள் பொதிந்துள்ளன. சைவசித்தாந்த சமயத்தின் அடிப்படையாகிய திருமுறை என்ற சொற்றொடரிலுள்ள இத் திரு சிவத்தையே குறிக்கும் ஓர் ஒப்பற்ற சொல்லாம்.

"முறை" என்றால் ஒழுங்கு நியமம், தடவை, ஒழுக்கம், உறவு, நீதி, பழமை, கூட்டு, நூல், தன்மை எனக் கருத்துக்களாகும்.

ஆகவே, திருமுறை என்றால் இங்கு சிவமேயாய முறை. சிவன் மகிழ்ந்தருள் முறை, சிவனை அடைதற்குரிய மேலாய முறை என்றெல்லாம் பொருள் படுகின்றன.

அருளிய ஆசிரியர்களும், தொகையும் காலமும் : பன்னிரு திருமுறைகளையும் அருளிய ஆசிரியர்கள் இருபத்தெழுவராவர். அவர்கள் பாடிய மொத்தப்பாடல்கள் 18351. கி. மு. 600 ஆண்டிற்கும் கி. பி. 1041 ஆண்டிற்கும் இடையில் பல்வேறு காலங்களில் செய்யப்பட்டவை. திருமூலர் திருமந்திரம் காலத்தால் முந்தியது. சேக்கிழார் செய்தருளிய பெரிய புராணம் காலத்தாற் பிந்தியது. அவற்றின் விவரம் கீழ் வருமாறு :

முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தர் பாடியருளிய தேவாரங்கள் (கி. பி. 574—655) 4147 பாடல்கள். இரண்டாவது மூன்று திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடி அருளிய தேவாரங்கள் 3066 பாடல்கள். ஏழாந் திருமுறை

சுந்தரர் பாடிய தேவாரங்கள் (கி. பி. 800) 1033 பாடல்கள் எட்டாந் திருமுறை மாணிக்கவாசகர் பாடி அருளிய திருவாசகம் திருக்கோவையார் 656—400 பாடல்கள். திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டுகள் ஒன்பதாம் திருமுறையாகும். 301 பாடல்கள். திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாம் திருமுறை (கி. மு. 600) 3081 பாடல்கள். திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவர், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமானடிகள், அதிரா அடிகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிருவரும் பாடிய பாசுரங்கள் பதினொராம் திருமுறையாகும் (கி. மு. 100 கி. பி. 1012) 1388 பாடல்கள். சேக்கிழார் செய்தருளிய பெரியபுராணம் என்ற திருத்தொண்டர் வரலாறு பன்னிரண்டாம் திருமுறையாம். (கி. பி. 1052) 4286 பாடல்கள்.

திருமுறை வகுக்கப்பட்ட வரலாறு : பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளாகிய மூவர் தேவாரங்களும் கி. பி. 10-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சிதம்பரத்தில்கோயிலின்கண் இருந்த ஓர் அறையில் சேமிக்கப்பட்டிருந்தன.

கி. பி. 966—970-ல் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட இராச ராச சோழனை அபயகுல சேகரன் மிகுந்த சிவபக்தன். அவனிடம் வந்த சிவ பக்தர்கள் தேவாரத்தில் சில பாசுரங்களைச் சொல்லக்கேட்டு அவற்றின் இனிமையிலும் செழுமையிலும் வியப்பும் மகிழ்ச்சியுமுற்று, உள்ளம் பறிகொடுத்துத் தேவாரம் முழுவதும் எங்கே கிடைக்குமென்று தேடி ஆராயலானான். எங்கும் கிடைக்காமற் போகவே மனம் வருந்தியிருந்தான்.

அதுபோது, திருநாரையூரிலே பொல்லாப் பிள்ளையாரின் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பியென்ற சிவ பக்தரின் பிரபாவத்தைக் கேள்வியுற்று, அங்குச் சென்று தன் குறைகளைக் கூற நம்பியாண்டார் விநாயகமூர்த்தியின் திருவருள் துணைகொண்டு திருமுறைகளின் இருப்பிடமாக இருந்த தில்லை ஆலயத்தை அடைந்து, அங்குள்ள தில்லை வாழ் அந்தணர்களின் உதவியோடு திருமுறைகள் சேமித்து வைக்கப் பட்ட அறையைக் கண்டு திறந்து பார்க்க, திருமுறைகள் புற்று மூடிக்கிடப்பதைக் கண்டனர். திடுக்கிட்டுப் புற்றை நீக்கி உள்ளேயிருந்த சுவடிகளையெடுத்துப் பார்த்தபோது பல பகுதிகள் கறையானால் அரிக்கப்பட்டுப் போயிருப்பதைக் கண்டனர். எஞ்சியிருந்தவற்றை எடுத்துச் சோதித்துத் தொகுத்தனர்.

திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் பதினாறாயிரம்; திருநாவுக்கரசர் பாடியவை நாற்பத் தொன்பதினாயிரம்; சுந்தரர் பாடியவை முப்பத்தெண்ணாயிரம்; ஆனால் இவைகளில் செல்லுண்டது போக மீந்தவை முறையே 384, 312, 100 பதிகங்களே யாகும். மிகுந்த மூவர் தேவாரங்களையும் ஏழு திருமுறைகளாக வகுத்தனர்.

அபயகுலசேகரனுக்குப் பின் கி. பி. 970—984-ல் பட்டத்திற்கு வந்த மதுராந்தக உத்தம சோழ அரசன் அக்காலத்தில் உள்ள அடியார்களை யெல்லாம் நம்பியாண்டார் நம்பிகளின் தலைமையில் ஒன்று கூட்டி ஏழு திருமுறைகளுடன் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் திருக்கோவையை எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் ஈறாக ஒன்பதின்மரும் பாடிய திருவிசைப்பா திருப்பல்லாண்டுகளை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும் வகுக்கச் செய்தனர்.

மதுராந்தக உத்தம சோழருக்குப்பின் கி. பி. 984-1014ல் அரசு செலுத்திய முதலாம் இராச ராசன் நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டே திருவாலவாயுடையார் முதல் பட்

டினத்தடிகள் ஈறாகப் பதினொரு பெரியாரும் பாடிய பாசுரங்களைப் பதினொராம் திருமுறையாக வகுத்தனன்.

பின்பு நம்பியாண்டாரும் மன்னனும் திருவெருக்கத்தம் புலியூரை யடைந்து திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பெண்மணியைக் கொண்டு திருமுறைகள் புறநீர்மை, பியந்தைக் கந்தாரம், இந்தளம், சாதாரி, நட்டராகம், காந்தார பஞ்சமம், காந்தாரம், கௌசிகம், தக்கேசி, நட்டபாடை, பழம்பஞ்சரம், பஞ்சமம், தக்கராகம், சீகாமரம், கொல்லிக் கௌவாணம், மேகராகக் குறிஞ்சி, குறிஞ்சி, பழந்தக்கராகம், கொல்லி, வியாழக் குறிஞ்சி, அந்தாளிக்குறிஞ்சி, செவ்வழி, செந்துருத்தி, திருத்தாண்டகம் என்பனவான 24 பண்களில் அடைவு செய்யப்பட்டன. இவைகளில் முதல் 12 பண்கள் பகலிலும், அடுத்த 9 பண்கள் இரவிலும், கடை 3 பண்கள் இருகாலத்திலும் பாடற்குரியன.

இப்பதினொரு திருமுறைகளையும் முதலாம் இராசராசன் செப்பேடு செய்து திருவாரூர்த் தியாகேசர் சந்நிதியில் ஏற்றி வைத்தான்.

முதலாம் இராசராசனுக்குப் பின் கி. பி. 1013-1042ல் பட்டத்திற்கு வந்த அவன் மகன் கங்கை கொண்ட முதலாம் இராஜேந்திரன் நம்பியாண்டார் நம்பிகள் பாடிய பிரபந்தங்களைப் பதினோராம் திருமுறையில் சேர்த்துவிட்டுச் சேக்கிழார் பெருமான் அரங்கேற்றிய திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாக வகுத்தமைத்துப் பன்னிரண்டு திருமுறைகளையும் செப்பேடு செய்து தில்லையில் கூத்தப்பெருமான் சந்நிதியில் ஏற்றிவைத்தான்.

திருமுறையின் பெருமை : இத்திருமுறைப் பாடல்கள் மூவருக்கும் முதலாய சிவபெருமான் பேரில் பாடிய தோத்திரங்களாகத் திகழ்கின்றன. தோத்திரத்தைப் பல வகையாகப் பாகுபடுத்தியுள்ளனர் :—

இறைவனின் உருவ வர்ணனை : உயிர்களை உய்விக்க வேண்டி இறைவன் எடுத்த பல்வேறு அவசரத் திருமேனிகளை வருணித்தல்.

இறைவன் லீலைகளை விவரித்தல் : பல்வேறு புராண இதிகாசங்களில் கூறியுள்ள சிவனார் ஆடிய பல திருவிளையாடல்களை வருணித்தல்.

இறைவனின் பண்புரைத்தல் : இறைவனின் அனந்த கலியாண குணங்களையும், பிரபாவங்களையும் புகழ்ந்துபாடுதல்.

நெஞ்சறிவுறுத்தல் : யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலிய நிலையற்ற பிரபஞ்ச வாழ்க்கையின் பயனற்ற தன்மையை நெஞ்சிற்கு நினைவூட்டி இறைவனடிகளில் மனத்தைச் செலுத்தச் செய்தல்.

பிழை நினைந்துருகல் : தெரிந்தும் தெரியாமலும் தாம் செய்த தவறுதல்களை இறைவனிடம் மனந்திறந்து முறையிட்டு மன்னிப்புக்கேட்டல்.

ஆட்கொள்ள வேண்டல்: உலக பந்த பாசங்களிலிருந்து மீட்டு, மும்மல மறுத்துத் தன்னை ஆட்கொள்ளவேண்டுமென இறைவனிடம பிரார்த்தனை செய்தல்.

தத்துவங்களை உணர்த்தல் : திருமுறைகள் தோத்திரப் பாடல்களாகக் காணப்படினும் அவற்றில் ஆங்காங்கே தத்துவ சாத்திர உண்மைகளைப் பொதிந்துவைத்தல். திருமந்திரம் மறைபொருளாம் (Mysticism) ஒரு குப்த வித்தை நூலாகும்.

இவ்வாறு வேதாகமக் கருத்துக்களையும் சைவ சித்தாந்த உண்மைகளையும் தன்னுள் அடக்கிப் பொலிவன இத் திருமுறைகள். இப்பன்னிரு திருமுறைகளும் சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களையும் முறையே பிரதிபலிக்கின்றன. பன்னிரு திருமுறையில் முதல் திருமுறையின் முதல் பாடல் முதல்வரி "தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி" என்பதையும் ஈற்றுத் திருமுறையின் ஈற்றுச் செய்யுள் ஈற்றடி "நின்றதெங்கும் நிலவி உலகெலாம்" என்பதையும் சேர்த்துப் பார்க்கும்போது உலகெல்லாமாகி நிற்கின்ற ஆண்டவன் உமையொருபாகன் சிவபெருமானே என்பதும், இவ்வடிகளின் முதலெழுத்தாகிய தகரமெய்யோடு புணர்ந்த 'ஓ'காரம், ஈற்றெழுத்தாகிய 'ம்'

என்ற மகர மெய்யோடு பொருந்தி "ஓம்" என்ற பிரணவ சொரூபமாய் நிற்றலையும் உணர்த்துவதைக் காணலாம்.

திருமுறை பாராயணப் பயன் :

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்றதற்கேற்ப வினையின் நீங்கிய நிறைமொழி மகான்களாகிய சிவனடியார்கள் சிவபெருமான் திருவருட் குறிப்பின் ஆணையால் அருளியதும் சிவன் மகிழ்ந்தருளச் சிவமணங் கமழுவதும் ஆகிய இத் திருமுறைகள் நினைத்ததைக் கொடுக்கும் மந்திரங்களே யாகும். இவற்றையே தமிழர்களாகிய நாம் இறை வழிபாட்டிற்கும், பிரார்த்தனைக்கும், அர்ச்சனைக்கும் வழக்கத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இத்திருமுறையைத் திரிகரண சுத்தியோடு, பக்தி விசுவாசத்துடனும், முழு நம்பிக்கையுடனும், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து, உள்ள உணர்ச்சியுடன் முறையோடு பாராயணம் செய்யின் இறைவனின் அருள் நோக்கும், அவன் ஆணையைக் கொண்டு செலுத்தும் தேவர்களின் துணையும், அவன் பிரதிநிதிகளாகிய திருச்சிற்றம்பலத்து அடியார்களின் அநுக்கிரகமும் அடையப்பெற்று இம்மை, மறுமைகளின் பயனெய்தி வீடு பேறடைவோம் என்பது திண்ணம்.

வான்முகில் வழாது பெய்க ; மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க ; குறைவிலாது உயிர்கள் வாழ்க ;
நான்மறை அறங்கள் ஓங்க ; நற்றவம் வேள்வி மல்க ;
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

மயிலம்

குறிஞ்சி நிலத்துக் குமாரக்கடவுள் கோயில் கொண்டுள்ள தொண்டைநாட்டுத் தலங்களுள், மயில்போன்று காட்சி

யளிக்கும் மாண்பொடு, முருகனையும் தாங்கி நிற்கும் குன்றுடைய காரணம் பற்றி, மயிலம் என்ற பெயரோடு விளங்கும் தலம் ஒன்று சென்னைக்கு மேற்கே (72) எழுபத்திரண்டு மயில் தொலைவிலுள்ளது. "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" முருகன் ஆனபடியினாலே, அத்தலத்தில் தமிழ்க் கல்லூரியொன்று இப்போதுள்ள 18-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீசிவஞானபாலயசுவாமிகளால் நிறுவப்பெற்று, அங்குப் பயின்ற பல தமிழ் வித்வான்கள் தமிழ்த்துறையில் தொண்டாற்ற வெளிவந்துள்ளனர். இன்றும் 150 மாணவர்கள் அக்கல்லூரியில் தமிழ் பயின்று வருகிறார்கள். அம்மலையின்மீது வீற்றிருக்கும் முருகப்பெருமானுடைய சந்நிதிக்கு வலப்புறத்துள்ளதொரு சமாதி. ஆங்குள்ள சிவலிங்கம் இற்றைக்கு 800 ஆண்டுகளுக்குமுன் ஒரு சித்த புருஷர் சிதாசிவ பாலய சுவாமி என்னும் பெயருடன் அங்கு வாழ்ந்து வந்து சிவமயமாக ஆன வரலாற்றைக் குறிக்கிறது. அவர் நிஷ்டை செய்து வந்த ஒடுக்கம் கோயிலின் உட்பிராகாரத்து வடக்குப் பக்கத்தில் மணிமண்டபத்திற்குக் கீழ் உள்ளது. இக் கல்லறையில் ஒருவர் தாராளமாக உட்கார்ந்து தியானித்திருக்கலாம். இத் தலத்தில் மயில் வடக்கு நோக்கிய முகத்தோடு நிற்கிறது. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி வள்ளி தெய்வயானை சமேதராய்க் கீழ்த்திசை நோக்கி நின்ற திருக்கோலத்துடன் காட்சியளிக்கிறார்.

பாலசித்தர், சிதாசிவ பாலயசுவாமி என்பவருடைய பூர்வீகம், கயிலைமலை மேற்கு வாயிற் காவலரும், கணத் தலைவருள் ஒருவராயுமிருந்த சங்கு கன்னப்பெருமானவர். சிவபெருமான் கட்டளைப்படி மயிலை மலைக்கருகிலுள்ள கீழ்த்திசை கடலின்கண் தோன்றியவர். 35 ஆண்டுகள் முருகனைக் குறித்து மயிலத்தில் உணவின்றித் தவம் கிடந்தவர் அதன் பயனாக முருகன் அருள் பெற்றவர். அருள் பெற்று அவர் விரும்பிய வரத்தின்படி முருகப்பெருமான் அம்மலையின்கண் கோயில் கொண்டருளி அடியவர்களுக்கு அருள்பாலிக்க இசைந்தார் என்பது அத் தலபுராண வரலாறு.

பால சித்தரிடம் உபதேசம் பெற்று அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர், அவருக்குச் சிறுவயதுமுதல் தொண்டாற்றிவந்த சிவஞான பாலய தேசிக னென்பார். பாலே உணவாகக் கொண்டு சீடபரம்பரையோடு பாலசித்தர் தோன்றிய கடற்கரை பிரமபுரமடத்திலும் மயிலத்திலுள்ள முருகர் கோயிலிலும் இருந்து வந்தார். இவரைப் பின் பற்றியே இதுவரை அப்பீடத்தமர்ந்துள்ள சுவாமிகள் அனை வரும் பாலேயே உணவாகக்கொண்டனர்.

இவருடைய அருட் செயல்கள் பலவற்றைக் கண்ட திரியம்பக மகாராஜன் இவருக்கு அணுக்கத் தொண்டனுகி அடிமை பூண்டொழுகிச் சுவாமிகள் கட்டளைப்படி மயிலத் திலும் பொம்மையபுரத்திலும் முருகப் பெருமானுக்குத் திருவாலயமும் சுவாமிகள் பூஜை செய்தற்குத் திருமடமும் கட்டுவித்துச் சில கிராமங்களைச் சர்வமானியமாகச் சிலா சாசனம் எழுதி நியமித்தான்.

இக் கோயிலுக்குக் கோபுரம் நிறுவியவர், கறையாம் புத்தூர் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் 15-ம் பட்டத் தவராவர். கி. பி. 1734 முதல் 1746 முடிய 13 யாண்டுகள் அம்மடத்தின் தலைவராக விளங்கியவர்.

அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இம் மயிலத்தில், 1940-ம் ஆண்டு சைவ சித்த மகாசமாஜக் கூட்டம் நடத்தப் பட்டது. அதற்குப்பின் மீண்டும் 1958-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 தேதிகளில் நமது சமாஜத்தின் 53-ம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்புற நடத்தித் தருவதற்கு இப்போதுள்ள 18-ம் பட்டம் வகிக்கும் குருமூர்த்தி ஸ்ரீமத் ஞான இராஜதானியான இனம் பொம்மையபாளையம் பெரிய மடம் சிவகஞ்சி மயூராசல, நிவாச, யதீஸ்வரகர்த்தரான, மயிலம் தேவஸ்தான ஆதீனபரம்பரை தர்மகர்த்தத்துவம் இனம்தார் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள், மனமுவந்து இசைந்துள்ளார்கள். சித்தாந்த ரத்னுகரம் க. வச்சிரவேல் முதலியார் B., A., L.T. அவர்கள் தலைமைவகிக்க இசைந்துள் ளார்கள்.

சமய பரிபாலனம்

மா. தங்கவேலு பிள்ளை

ஒரு நாட்டில் மக்கள் அமைதியுடன் வாழச் சத்தியம் நிலைபெறவேண்டும். சத்தியம் நிலைபெற மனம் பக்குவமடைதல் அவஸ்யம். மனம் பக்குவமடைய சத்சங்கமும் கட்டுப்பாடான பழக்கவழக்கங்களும் தேவை. இவை யாவற்றையும் சமயமே சமைத்துக்கொடுக்கிறது.

நாட்டின் அமைதியை விரும்பும் பொறுப்புள்ள பெருமக்களுக்குச் சமயத்தை வளர்ப்பது தவிர்க்கமுடியாதது. சமயம் கக்ஷியின் அடிப்படையிலின்றி இறைவழிபாட்டினியல்பில் அமையவேண்டும். சீவர்கள் அனைத்துக்கும் பொதுவாகவும் அவ்வவ் நிலப்பகுதியின் இயற்கை வேறு பாட்டிற்கேற்ப சிறப்பாகவுமுள்ள கொள்கைகளைக் கொண்டு சமயங்கள் அமையவேண்டும். அப்படியமையப் பெற்றதே எம் சைவ சமயம், இவ்விணையீடில்லாச் சமயத்தை வளர்ப்பதாலேயே நெருக்கடியான இக்காலக் கொடுமையிலிருந்து நாம் தப்ப வழியுண்டாகும்.

உயிருக்கும் உடலுக்கும் உறுதிபயப்பது ஆசாரம். அதன் விதிவிலக்குகள் சுகாதாரம், மருத்துவம், மனோதத்துவம், நவக்கிரக தத்துவம், மந்திரதத்துவம் முதலிய சாத்திர அடிப்படையில் அனுபவபூர்வமாக ஏற்படுத்தப்பட்டவை. சமயத்தைப் பின்பற்றுதல் சமய ஆசாரத்தைப் பின்பற்றுவதாகும். எனவே ஆசார சீலர்களை ஆதரிப்பது சமயத்தை வளர்ப்பதாகும். ஆசார சீலர்கள் நித்திய கர்மானுட்டானங்களை மேற்கொண்டு ஒழுகிவருவர். அத்தகையோர் அடியார்களுமாவர். ஆன்மார்த்தமாக அடியார்களும் பரார்த்தமாக ஆலய நிர்வாகிகளும் நடத்தும் இறைவழிபாடுகள் முறையாக நிகழ்ச் செய்வதே சமய பரிபானமாகும்.

கால நிலையை முன்னிட்டு முதற்கண் நாம் கவனிக்கத்தக்கது அடியார்களது நித்திய கர்மானுஷ்டானங்களுக்கு

வேண்டிய வசதிகளளிப்பதாகும். அதுவும் அவர்கள் தம் மிருப்பிடத்தைவிட்டு வெளியூருக்கு வந்த காலத்தில் அவர்களுக்கு வேண்டியவைகளைக் கவனிப்பதேயாகும். அதைச் சாதிக்கும் வழி முறைகள்பற்றி கவனிப்போம். பிரயாணிகளுக்கு உண்டியும் உறையுளும் கொடுக்க. எங்கும் ஓட்டல்கள் இருக்கலாம். ஆனால், அங்கு எவ்வித உயர்ந்த ஒழுக்கங்களையும் நாம் காண்பதில்லை. எப்படியும் அவை நம் தேவைக்குப் பொருத்தமானவையல்ல. பொதுமக்களுள்ளும் ஆசாரத்தை விரும்பி ஒழுகுவோர் இக்காலத்தும் அநேகர் உண்டு. Boarding Lodging போன்ற சாலைகளைச் சமயத்தின் பெயரால் சிஷ்யர்கள் அல்லது அங்கத்தினர்களுக்கு மட்டுமே பணிசெய்ய அமைத்தால் லாபகரமாகவே அவைகளை நடைபெறச் செய்யலாம். சந்தர்ப்பம்போல் தர்மத்திற்காக விடப்பட்ட கட்டிடங்கள் எவையேனும் பெற்று உபயோகிக்கலாம். அல்லது இப்பணியை ஆதரிப்போர்களைக் கொண்டு கூட்டுறவு முறையில் தொழிலாகவே நடத்தலாம். இத்தகைய நிலையங்கள் காசி, இராமேஸ்வரம், மதுரை, திருச்செந்தூர் முதலிய முக்கிய ஸ்தலங்களி லெல்லாம் ஏற்பட்டு, அவைகளில் அங்கத்தினர்கள் அல்லது சிஷ்யர்களுக்கு மட்டுமே இடமென்று வைத்தால் இயற்கையாகவே சமயம் பெருகிப் பரிபாலிக்கப்படும்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன்"

வித்துவான் – பாலூர் – கண்ணப்ப முதலியார், பி. ஓ. எல்.

இந்நாட்டில் திருவிழாக்கள் இடையறாது நடைபெற்று வந்தன என்பது நந்தம் செந்தமிழ் நூற்களின் வாயிலாக நன்கு அறிந்து கொள்ளலாம். அன்பர்களால் நிகழ்த்தப் பெறும் திருவிழாவில் இறைவன் உலாப்போதல் அழகை உலாப்பிரபந்தங்களின் மூலமும் அறிந்து இன்புறலாம். திருவிழாவில் இறைவன் சிறப்புறத் திகழ்ந்து ஆண்டுத் தன்னை வெளிப்படுத்தித் திகழ்வன் என்பதைத் திருமுருகாற்றுப்

படையில் "சாறயர்களத்து வீடுபெறத் தோன்றி" என்னும் அடிஅறிவித்து நிற்கிறது. இவ்வாறே சிலப்பதிகாரத்திலும், "சாறயர்களத்து வீறுபெறத் தோன்றி" யென வருவதைக் காணலாம்.

நந்தம் செந்தமிழ் நூல்களில் பலவாறு குறிப்பிட்டுள்ள அருமை பெருமைகளுக் கிணங்க பாலறாவாயராம் ஆளுடைய பிள்ளையார் தாம் திருமயிலைப் பதிகத்தில் அக்கோயிலில் இடையீடின்றி நடந்து வந்த திருவிழாக்களைக் குறிப்பிட்டே பாடியுள்ளார். திருமயிலை, விழாவுக்குப் பேர் போனது என்பதைத் தோணிபுரத் தோன்றலார் "மலிவிழாவீதி மாமயிலை" என்றும் "கலிவிழா" என்றும் கூறும் ஆற்றால் தெளியலாம். இவ்விழா மக்களின் கலியை (வறுமையினை) நீக்கும் விழா வாதலின் "கலிவிழா" என்றனர். விழாவில் ஒரே இன்ப ஆரவாரம் நிறைந்திருந்தது என்பதை "ஒலி விழா" என்றும் பாடியிருப்பது கொண்டும் பார்த்துக் கொள்ளலாம்.

அப்படிப்பட்ட விழாக்களில் அடியவர்களுக்கு அமுது படைக்கப்பட்டு வந்தன என்பதையும் அப்பதிகங்களில் காணலாம். அப்பதிகத்தின் வாயிலாக எலும்பாகக் கிடந்த அங்கம் பூம்பாவையை எழுப்பியருளினார்.

சேக்கிழார் பெருமானார், ஆன்றோர்களின் அருந்தொடர் கட்கு அருமையான பொருள் நுட்பம் காட்டுதலில் மிகச் சிறந்தவர் என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியுள்ளார். உதாரணமாக, "தென்புலத்தார்" என்ற சொற்றொடர்க்கு குரவர் என்று பொருள் கண்டு புகன்றிருப்பது போற்றத்தக்கது.

இப்பதிகத்தில் குறிப்பிட்ட விழாக்கள் ஒவ்வொன்றி னோடு "காணாதே போதியோ" என்னும் தொடரைக் கூட்டியே பொருள் காணுதல் வேண்டும். அவர் நல்விழா என்னும் தொடரில் உள்ள "அவர்" என்பது அடியாரைச் சுட்டி நிற்காது ஆண்டவனையே சுட்டி நிற்கும். விழாச் செய்யப்பட்டது அவனுக்கே ஆதலின் என்க. "போதியோ" என்று ஞானசம்பந்தர் குறித்துப்பாடுவதன் நோக்கமும்

கருத்தும் போதல் ஒண்ணுது வருதல் வேண்டும் என்பதே யாகும்.

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தலும் கண்ணினுல் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தலுமே ஆகும் என்பதை விளக்கவே தான். ஆளுடைய பிள்ளையார் இம்மயிலைப் பதிகத்தில் வேறு விதமாகப் பதிகத்தினைப் பாடி அமைக்காமல், மகேஸ்வர பூசையையும் திருவிழாக்களையுமே குறிப்பிட்டுப் பாடினுர். இந்த நுட்பத்தினை நன்குஅறிந்து தான் தொண்டர் சீர்பரவுவார் மேலே காட்டிய இரண்டும் மண்ணினில் பிறந்தார்க்கும் பெரும்பயன் அளிக்க வல்லன என்பது உண்மையா மெனில் உலகர் முன்வருக என உரைப் பார் என்று அறிதியிட்டு உறுதியாகக் கூறிப்போந்தார். ஆகவே சேக்கிழார் கருத்துக்கு அரண் செய்யும் முறையில் ஆளுடைய பிள்ளையார் அருள் வாக்கில் பொருள் பொதிந் துள்ளது என்பதே அடியனேன் கருத்து. ஆன்ருேர் மேலும் அறிந்து கூறினுல் அடியேனேன் அறிந்து கொள்ள அவாவுடையனுய் இருக்கின்றேன்.

பல இடங்களில் பிள்ளையார்

பெறலரும் குழவியெனப் பொருள்படப் பிள்ளையா ரெனும் திருநாமம் வகித்து விளங்கும் கடவுள் பல இடங் களில் பல்வேறு நாமங்களுடன் வழிபடப்படுவதாகக் காண் கிருேம். திபத்தேசத்தில் ts ogs-bdag: "ட்ஸா கஸ்பிடார்" எனவும், " bages Maid P'ai - beag - Po " ப்செக்ஸ் மெட் - பேய்ப்டாக்போ " எனவும், பர்மாதேசத்தில் "மஹா-பையனி;" (Maha-Pinne) எனவும், மங்கோலியா நாட்டில் " தூட்காஹர் - ஓன் - காகன் " (Tothkhan - oun - Khakan) எனவும், கம்போடியா நாட்டில் பிரஹ் கணேஸ் (Prah Kenes) எனவும், சீனதேசத்தில் "குவான் ஷிடியான் (Kvan-Shittien) எனவும்; ஜப்பான் தேசத்தில்

(Shotan) "சூதன்", விநாயக்ஷா (Vinayaksa), குவான் ஜான்ஷீ (Kwanzan - sho), "கான்கிடன்" (Kangitan) எனவும் பிள்ளையாரை வழிபடுவதாகக் கூறுகிறார்கள்

கணேசர் ஒன்று முதல் ஐந்து தலைகள் பெற்றவராகவும் உருவங்கள் உண்டு. இன்றும் பம்பாயில் "கண்சே ஜயந்தி" என இருமுகங்கள் உள்ள கணபதியைப் பூஜிக்கிறார்களாம். நேபாளத்தில் சதுர்முக கணேசர் உண்டு. இந்தோ சீனத்தில் பஞ்சமுக கணபதி இருக்கிறதாகக் கூறுகின்றனர். சீனத்திலும் ஜப்பானிலும் "அர்த்தநாரி கணேசர்" விக்ரகம் உண்டு. வாதாபி கணபதி யெனப்படும் நர்த்தன கணபதி சாளுக்கியரின் தலைநகராகிய பாதாமி (வாதாபி)யிலுள்ளது.

கன்னட தேசத்தில் "இடக்குஞ்சி" யென்றொரு புண்ணியஸ்தலம் ஷாவதி ஆற்றங்கரை மேலுள்ளது. இடக்குஞ்சிக் கணபதி "ஓம்" வடிவமாகத் தரிசனம் தருகிறார். அங்குள்ளது ஒரு அரிய விக்ரகமென்னலாம்.

அமெரிக்காவில் மெக்ஸிகோவிலும் பெருவிலும் விநாயக உருவங்களும், கணபதி கோயில்களும் உள்ளன. அறுவடைக்கால கணபதியாக அங்கு பூஜிக்கின்றனராம். ஆங்குள்ள வடிவம் இருகரங்களுடன், நெடுமால் போன்று ஓங்கார வடிவமாக, துதிக்கையை நேரே உயர்த்தி, மார்பில் தலைமாலையும் எலும்புகளும் அணிகலமாகக்கொண்டு இரும்புக் கவசத்துடன் தலையில் பாம்புப் படத்துடன் விளங்குவதாகக் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட வியாபகமுடைய விநாயகரை இம் மாத சதுர்த்தியன்று வழிபட்டு அவருடைய அருளிற்குப் பாத்திரர் ஆவோமாக.

—மா. ப. தியாகன்

சமாஜ அறிக்கை

14–9–1958-ல் சமாஜ நிர்வாக சபைக்கூட்டம் சென்னை, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் காலை 9-30 மணிக்கு நடைபெறும். —மா. ப. தியாகன்

அப்பர் தெப்பக்குளத் திருப்பணி நிதி

திருப்பாதிரிப்புலியூர் சிவதலத்தின் அண்மையிலிருக்கும் கரையேறவிட்ட குப்பத்திலுள்ள திருநாவுக்கரசு சுவாமிகள் கரையேறிய திருக்குளத் திருப்பணிக்காக மலாயாவிலிருந்து வெள்ளியாக வசூலான நன்கொடையின் விபரம் :

பெயர்கட்குமுன் திரு. என்றும், பின் அவர்கள் என்றும் சேர்த்துப் படித்துக்கொள்ளவும்.

கோலாலம்பூர் :—சி. க. நன்னித்தம்பி 5, சி. இரத்தின சபாபதி 5, கெ. தனராஜா 5, எம். நாகலிங்கம் 5, வி. பொன்னுத்துரை 5, வி. எஸ். மணியம் 5, கெ. கந்தையா 21, எஸ். தற்பரானந்தம் 5, க. சோமாஸ்கந்தர் 5, பி. இரத்தினத் துரை 5, வி. சுப்பிரமணியம் 5, அ. ஆறுமுகம் 5, சி. கந்தசாமி 5, சி. கந்தைய்யா 10, எ. பொன்னம்பலம் 12, ரா. ஆனந்தம் 5, சி. பஞ்சாக்ஷரம் 15, என். ஆர். கருப்பையா 5, எஸ். இராமச்சந்திரம் பிள்ளை 11, எஸ். பழனிவேலு பிள்ளை 11, சி. இராமசாமி 5, கு. இராமலிங்கம் 10, ப. பாலகிருஷ்ணன் 5, மு. சின்னதம்பி 5, இ. செல்லாச்சியம்மாள் 3, என். அருளானந்தம் 10, ஆர். எம். பி. அழகப்பச் செட்டியார் 5, பே. கிருட்னர் 5, வி. எ. கந்தைய்யா 5, வி. பி. முனிசாமி 5, எம். ஆறுமுகம் 5, வி. ஆறுமுகம். 5. க. கனகசபை 5, டாக்டர் மு. வேலுப்பிள்ளை 5, அ. இராசரத்தினம் 5, எஸ். அம்பலவாணர் 5, எம். தம்பிநாதன் 5, எ. எஸ். ராம் 5, சி. இராமசாமி 5, எம். இராமச்சந்திரன் 3, ராம. முனிசாமி, 5, பொ. முத்துத் தம்பி 5, எம். வி. கந்தையா 10, கெ. நவரத்தினம் 5, கி. சிங்காரம் 10, உ. பழனி 10, வெ. பழனியாண்டி 5, க. குருபாதம் 5, சீ. மு. பொன்னையா 7, சோ. ஆறுமுகம் 5, சி.எஸ். கந்தையா 10, எஸ். கந்தையா 10, எ. தருமலிங்கம் 5, ஜீ. வி. தேவர் 10, எம். தம்பிப்பிள்ளை 10, எ. செவ்வந்தி நாதன் 5, என். அழகானந்தம் 5, டி. குமாரசாமி 5, என். ஆரோக்கியசாமி 5, கே. பி. சுப்பையா 5, கே. கோவிந்தசாமி

5, மா. கோவிந்தசாமி 5, எம். சுப்பிரமணியம் 5, ந. வீரய்யா 5, என். கே. 5, பினங்கு : கே. அப்துல்ரஹ்மான் 5, சிரம்பான் : எம். எஸ். சுந்தரம் 5, என். எம். கே. ராஜீ 5,

புத்தக விற்பனை : செல்லத்துரை 10, இராமநாதன் 10, குமாரசாமி 10, கே. கோவிந்தசாமி 10, சகாதேவன் 20, பி. கோவிந்தசாமி 50,

குறிப்பு :—முன்பு வசூலான தொகை விபரம் மலர் 29 இதழ் 11-ல் வெளியிடப்பட்டிருக்கிறது.

திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பு

பக்திச் சுவையில் பெரிதும் ஈடுபட்ட திருவாளர்-திருவாசகமணி - K. M. பாலசுப்பிரமணிய முதலியார், B.A.,B.L. அவர்கள் செய்யுள் நடையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டுள்ள திருவாசகத்தை 24-8-58 ஞாயிற்றுக்கிழமை மாலை, சென்னைச் சென்னகேசவப் பெருமாள் கோயிலில், கனம் மந்திரியார் திரு. M. பக்தவத்சலம் அவர்கள் பாராட்டி அரங்கேற்றினார்கள். அப்போது அவ் விழாவிற்குத் தலைமை வகித்த சென்னை கவர்னர் விஷ்ணுராம் மேதி அவர்கள் தமிழ் மொழியின் தொன்மையைப் புகழ்ந்து பேசி முதலியாரவர்களின் தொண்டைப் பாராட்டினார்கள். சுப்ரீம்கோர்ட் நீதிபதி திரு. M. பதஞ்சலி சாஸ்திரியாரவர்கள் தேவாரங்களும் அவ்வாறு மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்றும், அதற்கு முதலியாரவர்களே ஆற்றலுடையவரென்றும், அப்பணிக்குத் தருமபுர ஆதீனம், திருப்பனந்தாளாதீனம் முதலிய செல்வமிகு மடங்கள் அவரைப் பயன் படுத்திக்கொள்ளலாமென்றும் கூறினார்கள். மற்றும் திவான் பகதூர் - K. S. இராமசாமி சாஸ்திரியார், கலைமகள் ஆசிரியர்-கி. வா. ஜகந்நாதய்யர் அவர்களும் அந்நூலைப் பாராட்டிப் பேசினார்கள்.